செ.வெ.எண்.179 நாள்:14.05.2021

நீலகிரி மாவட்டத்தில், கொரோனா வைரஸ் நோய் தடுப்பு குறித்து அரசுத்துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பான அனைத்துத்துறை அரசு அலுவலர்களுடனான ஆய்வு கூட்டம் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.கா.ராமசந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

---

நீலகிரி மாவட்டம், உதகை தமிழகம் அரசு விருந்தினர் மாளிகையில், கொரோனா வைரஸ் நோய் தடுப்பு குறித்து அரசுத்துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பான அனைத்துத்துறை அரசு அலுவலர்களுடனான ஆய்வு கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.கா.ராமசந்திரன் அவர்கள் தலைமையில் இன்று (14.05.2021) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு வளத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, நீலகிரி மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய் தொற்று பரவலை கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அனைத்து அரசுத்துறைகளும் நமது மாவட்டத்தில் கொரோனா தொற்றினை குறைக்க ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். குறிப்பாக, சுகாதாரத்துறை, உள்ளாட்சித்துறை, வருவாய்த்துறை, போன்ற துறைகள் ஒருங்கிணைந்து வீடுவீடாக சென்று கிருமிநாசினி கொண்டு தினமும் சுத்தம் செய்யப்பட வேண்டும். மேலும் சுகாதாரத்துறை மூலம் காய்ச்சல் முகாம்கள் நடத்தப்பட வேண்டும். கொரோனா தொற்றினை கட்டுப்படுத்த தமிழ்நாடு அரசு எடுத்து வரும் பல்வேறு முயற்சிகளுக்கு அரசு அலுவலர்கள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என மாண்புமிகு வளத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

பின்னர், மாண்புமிகு வளத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

நீலகிரி மாவட்டத்தில் கொரோனா நோய் தடுப்பு பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் மூலம் மற்ற மாவட்டங்களை ஒப்பிடும் போது, நமது மாவட்டத்தில் கொரோனா தொற்று நோயின் பாதிப்பு குறைவான அளவில் உள்ளது. நமது மாவட்டத்தில் இதுவரை 4,31,601 நபர்களுக்கு கொரோனா பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. கடந்த வாரம் வரையில் 1,000 நபர்களுக்கு கொரோனா பரிசோதனை செய்யபட்டு வந்தது. தற்போது குன்னூர் பாஸ்டர் இண்ஸ்டிடியூட் மூலமாகவும் பரிசோதனை மேற்கொள்வதன் மூலம் ஒரு நாளைக்கு 2,000 நபர்களுக்கு பரிசோதனைகள் செய்யப்பட்டு வருகிறது. மேலும்

கூடுதலாக கொரோனா தொற்று பரிசோதனை அதிகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தற்போது வரை நீலகிரி மாவட்டத்தில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 11,699 ஆக இருந்தது. இவர்களில் 10,529 நபர்கள் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். மீதமுள்ள 1,119 நபர்கள் வீட்டு தனிமையிலும், மருத்துவமனைகளிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும், கொரோனா தொற்று நோயினால் உதகை வட்டத்தில் 442 நபர்களும், குன்னூர் வட்டத்தில் 202 நபர்களும், கோத்தகிரி வட்டத்தில் 131 நபர்களும், கூடலூர் வட்டத்தில் 349 நபர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றன.

நீலகிரி மாவட்டத்தில் தற்போது வரை 1,59,074 நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. பொதுமக்கள் அனைவரும் தடுப்பூசி செலுத்தி கொள்ள முன்வர வேண்டும். உதகை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் உள்ள 160 படுக்கைகளில், 20 அவசர சிகிச்சை படுக்கைகளும்,110 ஆக்சிஜன் படுக்கைகளும், குன்னூர் அரசு மருத்துவமனையில் உள்ள 80 படுக்கைகளில், 1 அவசர சிகிச்சை படுக்கைகளும், 33 ஆக்சிஜன் படுக்கைகளும், கூடலூர் அரசு மருத்துவமனையில் உள்ள 52 படுக்கைகளில் 44 ஆக்சிஜன் படுக்கைகளும் உள்ளன. மேலும் குட்செப்பர்டு, லெய்ட்லா, ரிவர்சைடு, ஜிடிஎம்ஓ பள்ளி, ஜேஎஸ்எஸ் பள்ளிகள், இளைஞர் விடுதி, டேன்டீ விடுதி உள்ளிட்ட கொரோனா சிகிச்சை மையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகள் சேர்த்து மொத்தம் 955 படுக்கைகள் உள்ளன இதில் 477 படுக்கைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 478 படுக்கைகள் காலியாக உள்ளன. நமது மாவட்டத்தை பொறுத்தவரை நோயினால் பாதிக்கப்பட்ட நபர்கள் எவரும் மருத்துவனைக்கு வந்து படுக்கை வசதி இல்லை என திரும்பி செல்லவில்லை. நீலகிரி மாவட்டம் பொறுத்தவரை ஆக்சிஜன் பற்றாக்குறை ஏற்படவில்லை. இருப்பினும், ஆக்சிஜன் பற்றாக்குறை ஏற்படாமல் இருக்க இரண்டு ஆக்சிஜன் டேங்குகள் உதகமண்டலம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் நிறுவப்பட்டுள்ளது.

மேலும், கொரோனா நோய் தொற்று பரவல் அதிகரித்ததை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசானது 10.05.2021 முதல் 24.05.2021 வரை முழு ஊரடங்கு உத்தரவினை அமுல்படுத்தியது. தவிர்க்க முடியாத காரணங்களுக்கு மட்டும் குறிப்பிட்ட நேரத்திற்குள் சென்று வர தமிழ்நாடு அரசு அனுமதி அளித்தது. பொதுமக்கள் பொது இடங்களில் முககவசம் அணிவது, சமூக இடைவெளியை கடைபிடிப்பது, கிருமிநாசினி கொண்டு கைகளை சுத்தம் செய்து மற்றும் கூட்டம் கூடுவதை தவிர்ப்பது உள்ளிட்டவற்றை கட்டாயம் பின்பற்ற வேண்டும். மேலும் நோய் தொற்று அறிகுறிகள் தென்பட்டால் பொதுமக்கள் உடனடியாக அருகில் உள்ள மருத்துவமனையை நாடி மருத்துவ ஆலோசனை / சிகிச்சை பெற வேண்டும். தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ள கொரோனா தொற்று நோய் நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை பொதுமக்கள் முழுமையாக பின்பற்றாமல் தேவையற்ற முறையில் வெளியில் செல்வதாலும், அதிகபடியாக

கூட்டம் கூடுவதாலும் நோயின் தாக்கம் அதிகரித்து வருகின்ற காரணத்தினால் பொதுமக்கள் தேவையில்லாமல் வெளியில் வருவதை தவிர்க்க வேண்டும். பொதுமக்கள் அவ்வாறு இருந்தால் மட்டுமே கொரோனாவின் தாக்கத்தை குறைக்க முடியும். எனவே பொதுமக்கள் அரசு எடுக்கும் கொரோனா தடுப்பு முயற்சிகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கிட வேண்டும் என மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.கா.ராமசந்திரன் அவர்கள் தெரிவித்தார்.

மேலும், இந்திய வானிலை ஆய்வு மையம் விடுத்த எச்சரிக்கையின்படி அரபிக்கடலில் உருவாகியுள்ள புயலால் இன்று 14.05.2021 முதல் 16.05.2021 வரை நீலகிரி மாவட்த்தில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் உள்ள 6 வட்டங்களுக்குட்பட்ட இடங்களில் மழை காலங்களில் அதிக பாதிப்பு ஏற்படக்கூடிய இடங்கள் என கண்டறியப்பட்டுள்ள 283 பகுதிகளுக்கும் 42 மண்டல குழுக்கள் அமைக்கப்பட்டு அக்குழுக்கள் 24 மணி நேரமும் தயார் நிலையில் இருக்க வேண்டும் என சம்மந்தப்பட்ட அரசு அலுவலர்களுக்கு மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

அதனை தொடர்ந்து, டிவிஎஸ் மோட்டார் நிறுவனம், சுந்தரம் கிளேட்டன் நிறுவனத்துடன் இணைந்து சீனிவாசன் சர்வீஸ் அறக்கட்டளை சார்பில் 20 ஆக்சிஜன் செறிவூட்டிகளை மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.கா.ராமசந்திரன் அவர்கள் முன்னிலையில், உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.மனோகரி அவர்களிடம் வழங்கினார்கள்.

இவ் ஆய்வு கூட்டத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.இரா.பாண்டியராஜன், கள இயக்குநர்( முதுமலை புலிகள் காப்பகம்) திரு.கௌசல் இ.வ.ப., மாவட்ட வன அலுவலர் திரு.குருசாமி இ.வ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.எஸ்.நிர்மலா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.கெட்சி லீமா அமாலினி, துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) மரு.பாலுசாமி மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்.